**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.511/2025**
**வழக்கு சாட்சி PW– 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயஅரசன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | நடராஜன் | தொழில் | : | கண்டக்டர் |
| கிராமம் | : | தீர்த்தாரபுரம் | வயது | : | 35 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 02.06.2026.

**(1ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தீர்த்தாரபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் பேருந்தில் கண்டக்டராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சி சுந்தர்ராஜ், கலிங்கராஜா ஆகியோர்கள் என்னுடன் வேலை பார்க்கும் நபர்களாவர்கள். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கந்தவேல் மினிபஸ்சில் ஓட்டுநராக சுந்தரராஜீம், நடத்துனராக கலிங்கராஜீம் இருந்தார்கள். நான் அந்த மினி பஸ்சிற்கு மாற்று கண்டக்டராக இருந்தேன்.

சம்பவ நாள், நான் ஏ.பி.நாடானூரில் வீ.ஏ.ஓ ஆபிஸிற்கு அருகே நின்று கொண்டிருந்தேன். அப்போது எதிரி சண்முகவேலும், எதிரி ஆனந்த் என்பவரும் இருசக்கரவாகனத்தில் வந்தபோது, தடுமாறி கீழே விழுந்துள்ளார்கள். அவர்கள் கீழே விழுந்ததற்கு மினி பஸ் ஓரமாக வந்து அவர்கள் மீது மோதியதாக அவர்கள் பிரச்சனை செய்து டிரைவர் சுந்தரராஜிடம் வாக்குவாதம் செய்து பிரச்சனை செய்துள்ளார்கள். எனக்கு

டிரைவர் சுந்தரராஜ் போன் மூலம் இந்த தகவலை சொன்னார். நான் உடனே சம்பவயிடத்திற்கு வந்து பார்த்து எதிரிகளான ஆனந்த் மற்றும் சண்முகவேல் ஆகியோர்களிடம் பேசி சமாதானமாகி விட்டோம். பின்னர், மினி பஸ் பாப்பாங்குளம் – ஆழ்வார்க்குறிச்சி நோக்கி போனது.

கடைசியாக கடையத்திலிருந்து பேருந்தை எடுத்து வரும்போது, ஏ.பி.நாடானூர் செல்லப்பிள்ளையார்குளம் விலக்கில் வரும்போது, இரவு 07.45 – 08.00 மணியளவில் மினி பஸ்சின் கண்ணாடியை 4 பேர்கள் உடைத்து விட்டதாக எனக்கு தகவல் சொன்னார். நான் சம்பவயிடத்திற்கு போய் பார்த்தேன். அப்போது மினி பஸ்சின் முன்பக்க மற்றும் பின்பக்க கண்ணாடிகள் உடைந்திருந்தது. அங்கு எதிரிகள் இல்லை. பின்னர், மேனேஜருக்கு தகவல் சொல்லிவிட்டு ஆழ்வார்க்குறிச்சி காவல்நிலையம் சென்று சுந்தர்ராஜ் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.06 15:49:30 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.511/2025**
**வழக்கு சாட்சி PW– 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தங்கசாமி | தொழில் | : | தனியார் நிறுவன வேலை |
| கிராமம் | : | செல்லப்பிள்ளையார்குளம் | வயது | : | 22 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 02.06.2026.

**(1ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் செல்லப்பிள்ளையார்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கந்தவேல் மினிபஸ்சில் நான் கடையத்தில் வேலை பார்த்து விட்டு, உடல்நலக்குறைவிற்கு அங்கு ஊசி போட்டு விட்டு வந்து கொண்டிருந்தேன். பாப்பான்குளம் தாண்டி 2 ரோடுகள் பிரியும் விலக்கில் வரும்போது சத்தம் கேட்டது, அந்த மினிபஸ்சின் கண்ணாடிகள் உடைந்திருந்தது. யாரோ பஸ்சில் கல்விட்டு எறிந்ததாக பேசிக்கொண்டார்கள். நான் அதனை பார்க்கவில்லை. பஸ்சில் இருந்த நபர்கள் பஸ்சை விட்டு கீழே இறங்கினார்கள். நான் கண்டக்டரிடம் போன் வாங்கி என் அப்பாவிற்கு பேசினேன்.

என் அப்பா வந்து என்னை அழைத்து சென்றார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.06 15:49:36 +0530